18th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விரோதம் இருந்ததாகத்தான் புகாரிலே சொல்லப்பட்டது. அது மட்டுமல்ல. இந்த இன்ஸ்பெக்டருக்கும் இன்னும் சில பேருக்கும்கூட விரோதம் இருந்ததாக தகவல் கிடைத்திருக்கிறது.

SRI S. LAZAR : இந்த விசாரணையை சர்க்கார் எடுத்துக்கொள்ள முன் வந்தபொழுது, அல்லது போலீசார் எடுத்துக்கொள்ள முன்வந்த பொழுது, யாருமே சாட்சியம் சொல்ல முன்வரவில்லை என்பது உண்மை தானா ? அப்படி ஒன்று இரண்டு பேர் வந்தும் கூட, போதுமான சாட்சியம் இல்லை என்பது உண்மைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.

SRI M. JAGANNATHAN : What prompted the police authorities to refer the matter to the Professor of Medical Jurisprudence when the post-mortem certificate issued by the doctor who conducted the examination at Vanur Local Fund Hospital clearly showed that it was a case of murder and also when it was corroborated by the District Medical Officer who conducted post-mortem examination after the exhumation of the body?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I can only say, Sir, that the police wanted to be thorough in the post-mortem examination in this case and they also made a reference to the Professor of Medical Jurisprudence.

Works under Five-Year Plan.

* 268 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Chief Minister be pleased to state the works taken up and the amount spent thereon during the First Five-Year Plan period and the first year of the Second Five-Year Plan period in Peruvalappur and Kariamanickam firkas in the Lalgudi taluk, Tiruchirappalli district?

THE HON. SRI C. SUBRAMANIAM : Thirteen works have been taken up in Peruvalappur firka and the amount spent during the First Five-Year Plan and the first year of the Second Five-Year Plan is Rs. 28,633 and Rs. 30,387·56 respectively. Fifteen works have been taken up in Kariamanickam firka and the expenditure during First Five-Year Plan period and First Year of the Second Five-Year Plan period is Rs. 54,726 and Rs. 29,940 respectively.

SRI S. LAZAR : குறிப்பிட்ட ஒரு சில வேலைகளைப்பற்றி பதிலில் தெரிவிக்கப்பட்டது. இது பிர்க்காக்களிலே குடிதண்ணீர் வசதி, போதிய ரோடு வசதிகள் இல்லையென்பது சர்க்காருக்குத் தெரியுமா ? பஸ் போக்குவரத்து உள்ள ஒரு ரஸ்தாக்கூட இல்லை என்று புகார் வந்துள்ளதா ? இவைகள் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பது உண்மை தானா ? ஆகவே இதற்கு தனிப்பட்ட நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன் வருமா ?

MR. SPEAKER : The hon. Member can put only one question at a time. I think he has already put five questions. I would request hon. Members to put only one question at a time?

THE HON. SRI C. SUBRAMANIAM : I will answer all the questions in one sentence. இத்தனை கேள்விகளும் இதிலே உப கேள்விகளாக எழவில்லை. (சிரிப்பு.)